[1979 அக்டோபர் 29

சீமான் நகருக்கு மின்சக்தி வழங்கல்.

*வினா எண் 22—திரு. சீ. செல்வராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதியிலுள்ள ''சீமான் நகரில்'' மின் கம்பம் நாட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், ''ஒயர்'' இழுக்கப்படாமல் மின் இணைப்பும் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மின் கம்பங்கள் 1979ஆம் ஆண்டு சூன் திங்களில் நடப்பட்டன.

(ஆ) 9–7–1979 அன்று மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு விட்டன.

திரு. சீ. செல்வராஜ் ; மாண்புமிகு தலைவரவர்களே ''சீமான் நகரில்,, மின் கம்பம் நாட்டப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொளகிறேன். இன்னும் அதிகமான மின் கம்பங் கள் தேவைப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; நன்றிக்கு நன்றி. நன்றி உரிய வகையில் கௌரவிக்கப்படும்.

அரூர் வட்டத்திலுள்ள பிர்க்காக்கள்.

*வினா எண் 23—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அரூர் வட்டத்திலுள்ள ஆறு ரெவின்யூ பிர்க்காக்களை ஒன்பது பிர்க்காக்களாக மாற்றியமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

மாநிலம் முழுவதும் உள்ள பிர்க்காக்களை நிர்வாக வசதி களுக்கேற்பச் சிறியவைகளாகச் சீரமைக்க அரசு முடிவு செய் துள்ளது. ஹரூர் வட்டத்திலுள்ள 6 பிர்க்காக்கள் என்பது 9 பிர்க்காக்களாக அமைக்கப்பட்டிருக்கிறது.